# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.2/2021

**2025 ஆம்** வருடம் ஜூலை மாதம் 15 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.3-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லம் | ஜாதி | : | |
| க.பெ | : | அசோக்குமார் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2025 |
| தேதி | : | 15.07.2025 | | | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பியதன் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் ஏஞ்செலின் டீச்சர் வீட்டில் வைத்து ஜெர்மன் டீச்சர் எனக்கு பழக்கம். நாங்கள் நன்கு பழகிக்கொண்டிருந்த போது ஜெர்மன் டீச்சர் என்னிடம், அவர் உயில் எழுதப்போவதாகவும், அதில் என்னை சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று கேட்டார். அவர் சொன்னததில் இருந்து ஒரு வாரம் கழித்து திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகில் உள்ள குப்புசாமி நோட்டரி பப்ளிக் அலுவலகத்திற்கு மாலை 05.00 மணிக்கு வருமாறு ஜெர்மன் டீச்சர் என்னை அழைத்தார். அவர் அழைத்தது போன்று மேற்சொன்ன நேரத்திற்கு மேற்சொன்ன இடத்திற்கு சென்றேன். ஜெர்மன் டீச்சர் பஞ்சம்பட்டியை சேர்ந்த பாஸ்கர் என்பவருடன் அன்று மேற்சொன்ன அலுவலகத்தில் காத்திருந்தார். சிறுது நேரத்தில் வழக்கறிஞர் வந்தார்.

அவர் வந்தவுடன் ஜெர்மன் டீச்சர் வழக்கறிஞரிடம் அவர் உயிலை கைப்பட எழுதி வைத்திருப்பதாகவும், அதை நோட்டரி பப்ளிக் ஆகிய நீங்கள் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஜெர்மன் டீச்சர் என் முன்னிலையிலும், பாஸ்கர் முன்னிலையிலும், வழக்கறிஞர் முன்னிலையிலும் உயிலின் ஐந்து பக்கத்திலும் கையொப்பம் செய்தார். ஜெர்மன் டீச்சர் கையெழுத்து செய்த பிறகு உயிலை பாஸ்கர் என்பவரிடம் கொடுத்தார். அந்த உயிலில் பாஸ்கர் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்தார். மீண்டும் ஜெர்மன் டீச்சர் பாஸ்கரிடம் இருந்து உயிலை வாங்கி, பாஸ்கரின் விலாசத்தை பாஸ்கரின் கையெழுத்துக்கு கீழ் எழுதினார். அதன்பிறகு இரண்டாவது சாட்சியாக என்னை கையெழுத்து போட சொன்னார்கள். நானும் கையொப்பம் செய்து என்னுடைய விலாசத்தை உயிலில் எழுதினேன்.

என்னிடம் காட்டப்படும் உயிலில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அதை நான் தான் செய்து கொடுத்தேன். உயிலில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **(வா.சா.ஆ.21/PW.3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு வழக்கறிஞர்

உயிலை வாங்கி முத்திரை செய்து Attested செய்து கொடுத்தார். நான் அதன்பிறகு கிளம்பி வந்துவிட்டேன். அந்த உயிலை ஜெர்மன் டீச்சர் யாருக்கு எழுதினார்கள் என்றவெல்லாம் எனக்கு தெரியாது. உயிலில் உள்ள வாசகங்கள் பொருத்து எனக்கு எதுவும் தெரியாது. 2012 ல் ஜெர்மன் டீச்சர் இறந்தபிறகு நான் கையெழுத்து செய்த உயிலை ஜெர்மன் டீச்சர் ஜெரால்டுக்கு எழுதி வைத்தார் என்று ஜெரால்டு சொல்லி தான் எனக்கு 2012 ல் உயிலை யாருக்கு எழுதினார்கள் என்று எனக்கு தெரியும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சாட்சி சொல்ல வேண்டும் என்று சாட்சி கேட்டுக்கொண்டார். அழைப்பாணை அனுப்பப்பட்டது, அதன் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன்.

**10, 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் M.A படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறீர்கள் என்றால் வேலை எதுவும் பார்க்கவில்லை. உங்கள் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் வழக்கறிஞர் வேலை செய்கிறார். இந்த வழக்கையும், இதனுடன் இணைந்த மற்றொரு வழக்கான 2/2021 என்ற வழக்கையும் உங்கள் கணவர் தான் வாதிகளுக்காக நடத்தினார் என்றால் சரிதான், அந்த விபரம் உங்களுக்கு எப்போது தெரியும் என்றால் நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பாக தெரியும். உங்களுடைய முகவரி பஞ்சம்பட்டி என்றால் சரிதான். பஞ்சம்பட்டியில் உங்கள் விலாசம் என்ன என்றால் கதவு எண்.3/22, வார்டு 3, இந்திரா நகர், பஞ்சம்பட்டி ஆகும்.

மேற்படி முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறீர்கள் என்றால் திருமணம் ஆன கடந்த 35 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். ஏஞ்செலின் டீச்சரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 2001 ஆம் ஆண்டில் இருந்து தெரியும். மேற்சொன்ன டீச்சர் எந்த ஊர் என்றால் அவரும் பஞ்சம்பட்டி தான். ஏஞ்செலின் டீச்சர் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் உயிருடன் தான் உள்ளார். ஜெர்மன் டீச்சர் உங்கள் உறவினரா என்றால் இல்லை, பழக்கம்.

ஜெர்மன் டீச்சர் எந்த வகுப்பிற்கு பாடம் எடுத்தார் என்றால் அவர் தையல் டீச்சர் ஆவார். ஜெர்மன் டீச்சர் எந்த பள்ளியில் தையல் ஆசிரியராக வேலை பார்த்தார் என்றால் தேனியில் உள்ள Presentation Convent என்ற பள்ளியில் தையல் ஆசிரியராக வேலை செய்தார். நீங்கள் கையெழுத்து செய்ததா சொல்லும் போது ஏஞ்செலின் டீச்சர் இருந்தாரா என்றால் இல்லை. பஸ்டாண்ட் பக்கம் எந்த பக்கத்தில் வழக்கறிஞர் அலுவலகம் உள்ளது என்றால் பாலாஜி பவன் அருகில் உள்ளது. நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவரா என்றால் இல்லை.

சாட்சி பாஸ்கர் எந்த ஊர்க்காரர் என்றால் அவரும் பஞ்சம்பட்டி தான், கையெழுத்து செய்த போது தான் அவர் பஞ்சம்பட்டி என்று தெரிந்தது. நீங்கள் பார்க்கும் போது ஜெர்மன் டீச்சர் கையெழுத்து மட்டும் தான் செய்தாரா என்றால் கையெழுத்து மட்டும் தான் செய்தார், உடன் போட்டாவும் ஒட்டினார். மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தார்கள் என்றால் ஐந்து கையொப்பம் செய்தார்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் எத்தனை கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஒரே கையொப்பம் தான் செய்தேன். பாஸ்கர் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரே கையொப்பம் தான் செய்தார்.

நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் எந்த ஒரு கையொப்பத்தையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெர்மன் டீச்சர் என்பவர் யார் என்றே உங்களுக்கு தெரியாது

என்றால் சரியல்ல. பாஸ்கர் என்பவர் யார் என்றே உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்ட உயிலில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் நீங்கள் உயிலில் சாட்சி கையொப்பம் செய்திருந்தால் உயிலில் உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டு கையொப்பம் செய்திருப்பீர்கள் என்றும், அவ்வாறு உயிலில் என்ன எழுதியுள்ளது என்று தெரிந்துகொள்ளாமல் கையொப்பம் செய்துள்ளதால் நீங்கள் உயிலில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2012 ஆம் ஆண்டு தான் ஜெரால்டு என்பவரையும் உங்களுக்கு முதன்முதலில் தெரியும், உயில் ஜெரால்டு என்பவருக்கு எழுதப்பட்டுள்ளது என்ற விபரமும் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டு தான் தெரியவந்தது என்றால் சரிதான். வாதி ஜெரால்டுக்கு சாதகமாக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சாட்சியை மற்ற பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor